19th March 1958]

THE HON. SRI R. VENKATARAMAN : மத்திய சர்க்கார் "இதுசம்பந்தமாக நாங்கள் ஒரு மசோதாவைக் கொண்டுவர உத்தேசித்திருக்கிறோம்" என்ற அவர்களுடைய அபிப்பிராயத்தை எங்களுக்கு எழுதியனுப்பினார்கள். "அப்படிப்பட்ட ஒரு மசோதாவைக் கொண்டுவந்தால், நாங்கள் அதைப் பொதுவாக ஆதரிக்கிறோம்" என்று இந்த ராஜ்ய சர்க்கார் சொல்லியிருக்கிறார்கள்.

SRI M. KALYANASUNDARAM : தாங்கள் ஒரு மசோதாவைக் கொண்டுவரவிருப்பதால், ராஜ்ய சர்க்கார் தனியாக மசோதா கொண்டுவரக்கூடாது என்று மத்திய சர்க்கார் சொல்லியிருக்கிறார்களா ? எந்தக் காலத்துக்குள் மத்திய சர்க்கார் இந்த மசோதாவைக் கொண்டுவருவார்கள் என்பதுபற்றிய அறிகுறி ஏதேனும் ராஜ்ய சர்க்காருக்குத் தெரிகிறதா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த விஷயம் 'கன்கரெண்ட் லிஸ்ட்'-ல் இருப்பதால், இது சம்பந்தமாக மத்திய சர்க்கார் ஒரு சட்டம் கொண்டுவந்தால் மாநில சர்க்கார் எந்த விதமான சட்டமும் கொண்டுவர முடியாது. இது சம்பந்தமாக ஒரு சட்டம் கொண்டுவரப்போவதாக மத்திய சர்க்கார் சொல்லியிருப்பதால், தாங்கள் ஒரு சட்டம் கொண்டுவரலாமா என்று ராஜ்ய சர்க்கார் யோசனை செய்யவில்லை. மத்திய சர்க்கார் எப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டுவருவார்கள் என்று அறிவதற்கு, கனம் அங்கத்தினரின் பார்லிமெண்ட் நண்பர்கள் பார்லிமெண்டில் கேள்வி போட்டால் மத்திய அரசாங்கத்தார் உறுதியான பதில் கொடுக்க முடியும். அந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியாது.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that next to the cinema industry, the motor industry is earning huge profit?

MR. SPEAKER : What has that question to do with the main questiton? Next question.

Kallagam Odai Scheme.

* 369 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the investigation of the Kallagam Odai Scheme in Lalgudi taluk, Tiruchirappalli district, is over;

(*b*) the cost of the scheme and the extent of lands that will be irrigated under it; and

(*c*) when the scheme will be taken up for execution?

THE HON. SRI P. KAKKAN : (*a*), (*b*) & (*c*) : The investigation has not yet been completed. The question of execution can be considered only after the investigation is completed, and the scheme is found worthwhile pursuing.

SRI S. LAZAR : புள்ளம்பாடி வாய்க்கால் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. அந்தத் திட்டம் இந்த ஓடையை யடுத்துச் செல்கிறது. ஏற்கெனவே காவேரியில் வரும் தண்ணீர் போதுமானதாக இருக்கிறதா என்ற சந்தேகம் சர்க்காருக்கு இருக்கும் நிலையில், இந்தத் தண்ணீரையும் உபயோகித்துக்கொள்வதற்காக இந்தத் திட்டத்தை சர்க்கார் பரிசீலிக்குமா ?

THE HON. SRI P. KAKKAN : திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது.

Green manure

* 370 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether the ryots are permitted to collect green manure from unreserved forests; and